*முற்பகல் 10—55*

அதுமட்டுமல்லாமல், எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்றால், 5 சென்ட் நிலத்தை இலவசமாக பத்திரப் பதிவு செய்து, நூலக ஆணையக் குழுவிற்கு வழங்கவேண்டிய கட்டாயமும் இருக்கிறது. அதேபோல, புரவலர்களாக இரண்டு நபர்கள் ரூ.1,000/– செலுத்தி, பதிவு செய்யப்பட வேண்டும்; அதேபோன்று, உறுப்பினர் தொகை ரூ.20/–ம், ஆண்டுச் சந்தா ரூ.10/–ம் செலுத்திய 200 உறுப்பினர்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், basic furniture என்ற வகையில் ரூ.2,000/–க்கான தளவாடப் பொருட்கள் அமையப்பெற்றிருத்தல் வேண்டும். இதுபோன்ற விதிமுறைகளுக்குட்பட்டு வந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியில் நூலகம் அமைப்பதற்கான அனுமதியைக் கண்டிப்பாக நம்முடைய அரசாங்கம் வழங்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.

**திரு. இ. பரந்தாமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருங்காலத்தில் அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு கிளை நூலகம் அமைத்துத் தரப்படும் என்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**120—**

## உடற்பயிற்சிக் கூடம்

***12063—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*2022 ஏப்ரல் 18]*

*(அ) செங்கல்பட்டு தொகுதி, ஒழலூர் ஊராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி, ஒழலூர் கிராம ஊராட்சியில் திறந்தவெளி உடற்பயிற்சி மையமும், உடற்பயிற்சி உபகரணங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த வசதிகளை மேற்படி கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

**திருமதி ம. வரலட்சுமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், ஒழலூர் கிராம ஊராட்சியில் 300-க்கும் மேற்பட்ட இளைஞர்களும், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளும் இருக்கிறார்கள். இவர்கள்* volleyball, cricket, *இறகுப் பந்து போன்ற விளையாட்டுகளில் மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் பல்வேறு போட்டிகளில் கலந்துகொள்கிறார்கள். இவர்களில் பெரும்பாலானோர் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருப்பதால், பணம் செலுத்தி தனியார் உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்ல முடியாத நிலை உள்ளதால், அங்கு அனைத்து உபகரணங்களுடன்கூடிய நவீன உடற்பயிற்சிக் கூடத்தை அமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*

அவர்கள் விளையாட்டுத் துறையில் எடுத்திருக்கின்ற பல்வேறு நடவடிக்கைகளின் அடிப்படையில் தேசிய அளவிலும், உலக அளவிலும் பல்வேறு சாதனைகளை நம்முடைய விளையாட்டு வீரர்கள் நிகழ்த்தி வந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மத்தியப் பிரதேச மாநிலம், போபாலில் நடைபெற்ற தேசிய Senior Hockey பிரிவில் பங்கேற்ற நம்முடைய தமிழக வீரர்கள் 22 ஆண்டுகளுக்குப் பிறகு இறுதிப் போட்டியில் பங்கேற்று நேற்றையதினம் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்திருக்கிறார்கள் என்கின்ற நல்ல செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு கிராமப்புறங்களிலிருக்கின்ற பல இலட்சம் விளையாட்டு வீரர்களை விளையாட்டு மைதானங்களுக்குக் கொண்டு வந்து அவர்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

செங்கல்பட்டு மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். 359 கிராம ஊராட்சிகளையும், 12 பேரூராட்சிகளையும் உள்ளடக்கிய செங்கல்பட்டு மாவட்டத்தில், மாவட்ட தலைமையிடத்தில் மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான முதற்கட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கின்ற விளையாட்டு வீரர்கள் அதிகமாகக் கேட்பது உடற்பயிற்சிக் கூடங்கள்தான். அந்த வகையில், நம்முடைய மாண்புமிகு ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியில் 10–க்கும் மேற்பட்ட உடற்பயிற்சிக் கூடங்களை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற ஓழலூர் கிராம ஊராட்சியில், விளையாட்டு வீரர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, விரைவில் இந்த ஆண்டு தேவையான உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்கப்பட்டு உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

*2022 ஏப்ரல் 18]*

**திருமதி ம. வரலட்சுமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தரப்படும் என்று உறுதியளித்தமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மேலும், செங்கல்பட்டு மாவட்டம் புதிய மாவட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ளதால், அங்கு மாவட்ட விளையாட்டு அரங்கம் அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். எனவே, இளைஞர்களின் நலனைக் கருதி, அந்த விளையாட்டு அரங்கத்தினை அமைக்க அனுமதியும், நிதி ஒதுக்கீடும் செய்து தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*மேலும், அங்கு ஓர் உள் விளையாட்டு அரங்கத்தினையும் அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். 10 ஏக்கர் நிலம் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வாறு விளையாட்டு அரங்கம் அமைத்துத் தரும்பட்சத்தில், செங்கல்பட்டு மாவட்டத்திற்கென மாவட்ட விளையாட்டு அலுவலர் மற்றும் அனைத்து விளையாட்டுகளுக்கும் தேவையான பயிற்றுநர்களையும் நியமனம் செய்து தருமாறும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு சுற்றுச்சூழல் – காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்திற்கான புதிய விளையாட்டு அலுவலர் நியமனத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு* Mini Indoor Stadium *வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு* Mini Indoor Stadium *அமைக்கப்படும் என்கின்ற அறிவிப்பைத் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கின்ற அந்த இடத்தில், தேவைக்கேற்ப 6 முதல் 7 ஏக்கர் இடம் இருப்பின், அதனை ஆய்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கருத்துரு பெறப்பட்டு, அந்தப்*

பகுதியில் Mini Indoor Stadium அமைப்பதற்கான நடவடிக்கை எடுப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு.* R.D. *சேகர், மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**121—**

## தொழிற்பயிற்சி நிலையம்

***5640—திரு. R.D. சேகர்:**

*மாண்புமிகு தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பெரம்பூர் தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்படுமா என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். தற்போது அவ்வாறு அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கின்ற கருத்துரு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு.* R.D. *சேகர் அவர்கள்.*

**திரு. R.D. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், எங்கள் இளைஞரணிச் செயலாளர் அவர்களையும் வணங்குகிறேன்.